நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை.**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருமங்கலம்.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.414/2022

**CNR No.TNMD14 - 001679 - 2022**

*****

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,

திருமங்கலம் தாலுகா காவல் நிலையம்,

குற்ற எண்.378/2017 ... குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

இளமாறன் (வயது 25/2022),

த/பெ.செல்வராஜ்,

கிழக்கு தெரு, சித்தாலை,

திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம். ... குற்றம் சாட்டப்பட்டவர்

| | | | |
|---|---|---|---|
| 1. | **ஆண்டு பட்டிகை வழக்கு எண்.414/2022** | | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | | திருமங்கலம் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.378/2017 |
| **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | | |
| 3. | எதிரியின் பெயர் | : | இளமாறன் |
| 4. | எதிரியின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | த/பெ.செல்வராஜ் |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | எதிரியின் முகவரி | : | கிழக்கு தெரு, சித்தாலை, திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம். |
| 7. | எதிரியின் வயது | : | 25/2022 |
| **தேதி விபரங்கள்** | | | |

| | | | |
|---|---|---|---|
| 8. | சம்பவம் | : | 13.11.2017 |
| 9. | புகார் | : | 14.11.2017 |
| 10. | கைது தேதி | : | -- |
| 11. | பிணை விடுப்பு | : | Anticipatory Bail |
| 12. | Committal | : | -- |
| 13. | விசாரணை துவக்கம் | : | 03.03.2026 |
| 14. | விசாரணை முடிவு | : | 05.03.2026 |
| 15. | தண்டணை (அ) ஆணை | : | குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | : | -- |
| 17. | Period of Remand of the accused | : | - |
| 18. | Date of filing of the final report | : | 15.07.2022 |
| 19. | Date of questioning U/s.240, 246 & 251 of Cr.pc | : | 11.10.2022 |
| 20. | Miscellaneous petition and their results | : | U/s.311 CrP.C – Allowed<br>U/s.359 BNSS - Dismissed |
| 21. | Date of examination in chief and cross | : | see table below |
| 22. | Date of examination accused U/s.313 Crpc | : | 05.03.2026 |
| 23. | Details of abscondence of accused and his appearance/production | : | Nil |
| 24. | Grant of stay by Superior court and the results thereof | : | Nil |
| 25. | காலதாமதத்திற்கான காரணம்: இல்லை | | |

Item 21:

| PW's | Chief | Cross |
|---|---|---|
| 1. | 03.03.2026 | 03.03.2026 |
| 2. | 03.03.2026 | 03.03.2026 |
| 3. | 03.03.2026 | 03.03.2026 |
| 4. | 04.03.2026 | 04.03.2026 |

இவ்வழக்கானது கடந்த 01.08.2022ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையின் போது, அரசின் சார்பாக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.S.முத்துசெல்வி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், சாட்சிகளின் சாட்சியங்களையும், ஆவணங் களையும் நன்கு பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கின் வாதிக்கும் எதிரிக்கும் கால்பந்து விளையாடுவது சம்மந்தமாக முன்பகை இருந்து வந்த நிலையில், கடந்த 13.11.2017ம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் சித்தாலை கிராமத்தில் வாதி கடைக்கு சென்று கொண்டிருந்த போது எதிரி வாதியை அசிங்கமாக பேசிவிட்டு, எதிரி வாதியின் வீட்டின் முன்பு வந்து வாதியை தேவிடியா மகனே இப்பவாடா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொண்டே கையால் அடித்து கீழே தள்ளிவிட்டும், இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால் வாதியின் வலதுபக்க காதுக்கு கீழ் கழுத்தில் குத்தியும், வாதி தப்பிக்க முயற்சித்த போது வாதியின் இடதுபக்க காதுக்கு கீழ் கத்தியால் கழுத்தில் குத்தியும், வாதி அலறல் சத்தம் கேட்டு வாதியின் அப்பா, அம்மா, மலர், பாண்டியம்மாள் ஓடி வருவதை பார்த்த எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி வாதியை இனிமேல் என் வழியில் தலையிட்டால் உன்னையும் உன் குடுமபத்தையும் இங்கேயே கொன்று புதைத்து விடுவேன் என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளதாக எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) IPCன் படி குற்றம் புரிந்துள்ளதாக திருமங்கலம் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

02. இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான போது எதிரிக்கு வழக்கு நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

03. இவ்வழக்கில் எதிரிக்கு நகல்கள் வழங்கப்பட்ட பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பிறகு குற்றம் பற்றி வினவிய போது எதிரி பொய் வழக்கு என்று மறுத்து கூறினார். இரு தரப்பும் கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) IPCன் கீழ் குற்றசாட்டுகள் வனைந்து படித்துக்காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்ட போது எதிரி மீண்டும் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்.

04. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>

05. கடந்த 13.11.2017ம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் சித்தாலை கிராமத்தில் வாதி கடைக்கு சென்று கொண்டிருந்த போது எதிரி வாதியை அசிங்கமாக பேசிவிட்டு, எதிரி வாதியின் வீட்டின் முன்பு வந்து வாதியை தேவிடியா மகனே இப்பவாடா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொண்டே கையால் அடித்து கீழே தள்ளிவிட்டும், இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால் வாதியின் வலதுபக்க காதுக்கு கீழ் கழுத்தில் குத்தியும், வாதி தப்பிக்க முயற்சித்த போது வாதியின் இடதுபக்க காதுக்கு கீழ் கத்தியால் கழுத்தில் குத்தியும், வாதி அலறல் சத்தம் கேட்டு வாதியின் அப்பா, அம்மா,

மலர், பாண்டியம்மாள் ஓடி வருவதை பார்த்த எதிரி தன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி வாதியை இனிமேல் என் வழியில் தலையிட்டால் உன்னையும் உன் குடுமபத்தையும் இங்கேயே கொன்று புதைத்து விடுவேன் என்று மிரட்டியதாக உள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>

06. இவ்வழக்கின் சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் மற்றும் புகார் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும் ராகுல் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தது பற்றி முருகன் மற்றும் சத்யா ஆகியோர்கள் முறையே அ.சா.2 மற்றும் 3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கினை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட திருமங்கலம் தாலுகா சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பக்ரூதின் பரூக் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.பாண்டியராஜ் ஆகியோர்களை தனக்கு நன்கு தெரியும் என்றும் அவர்களது கையெழுத்துகள் நன்கு தெரியும் என்றும் கூறி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக திருமங்கலம் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ராஜா என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், அ.சா.1ன் காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் மற்றும் எதிரி நீக்க அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>எதிரியை கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

07. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது அவற்றை எதிரி பொய் சாட்சியம் என்று கூறியதோடு தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**<u>வாதுரைகள்:–</u>**

08. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பில் எதிரி மீதான வழக்கை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

09. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.S.முத்துசெல்வி அவர்கள் வாதிடும் போது அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும் வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட வழக்கு என்றும் எதிரியும் அ.சா.1ம் தற்பொழுது சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்து உள்ளதாகவும், இந்த வழக்கின் சம்பவ சாட்சிகள் அனைவரும் தங்களது சாட்சியத்தின் போது அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாகவும் எனவே அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச் சாட்டுகளை எந்தவித சந்தேகங்களுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

**<u>ஆய்வுக்குரிய பிரச்சனை:–</u>**

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) IPCன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>சாட்சிகளின் மதிப்பீட்டல்:–</u>**

11. இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரான அ.சா.1 தனது சாட்சியத்தின் பொழுது கடந்த 2017ம் வருடம் மாலை 7 மணியளவில் தனக்கும் எதிரிக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாகவும், அதில் தான் கீழே விழுந்து கழுத்தில் இரத்தகாயம் ஏற்பட்டது என்றும், சிகிச்சைக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்ததாகவும், இது சம்மந்தமாக தான் புகார் வாக்குமூலம் அளித்ததாகவும், தான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றும், மேல் நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றும், தன்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதை தான் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன் என்றும் சாட்சியம் அளித்து, அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

12. இவ்வழக்கின் சம்பவ சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தின் பொழுது தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்து அவர்களை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அவர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

13. இவ்வழக்கில் எதிரியும் அ.சா.1ம் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி சமாதானமனு தாக்கல் செய்துள்ளார்கள்.

14. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 மற்றும் சம்பவ சாட்சிகளான அ.சா.2 மற்றும் 3 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளை சாட்சியாக விசாரித்தாலும் வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக திருமங்கலம் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ராஜா என்பவரை அ.சா.4 ஆக விசாரித்து, அவர் மூலமாக வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து அரசு தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசு தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

15. மேற்கண்டவாறு அரசு தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் 3 வரையுள்ள சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் அவர்கள் எந்த இடத்திலும் எதிரி அ.சா.1ஐ பொது இடத்தில் பொது மக்களுக்கு மத்தியில் வைத்து திட்டியதாகவோ, அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டது பற்றி அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரியை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்ககூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் இல்லாததால் எதிரி மீதான குற்றச்செயல்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின்

பலன்களை எதிரிக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

16. முடிவாக, அரசு தரப்பு வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்கி எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) IPCன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. சொத்துக்கள் இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 09ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**<u>1. அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

அ.சா.1. ராகுல்

அ.சா.2. முருகன்

அ.சா.3. சத்யா

அ.சா.4. ராஜா, சார்பு ஆய்வாளர்.

**<u>2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

அ.சா.ஆ.1. புகார் வாக்குமூலம்

அ.சா.ஆ.2. சமாதான மனு

அ.சா.ஆ.3. முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4. பார்வை மகஜர்

அ.சா.ஆ.5. மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6. அ.சா.1ன் காயச்சான்று

அ.சா.ஆ.7. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

அ.சா.ஆ.8. எதிரி நீக்க அறிக்கை

**3. சான்று பொருள்:–** இல்லை

**4. எதிரி தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**குறிப்பு:–** 1) விசாரணையின் போது எதிரி பிணையிலிருந்தார்.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:–** மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR Date: 2026.03.09 16:18:29 +0530

நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.